**இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகம் - 2017**

இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவக அதிகாரச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கையொன்று நிறுவகத்தின் தலைவருக்கு 2018 ஆகஸ்ட் 28 இல் வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 65 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 201,323,461 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

காசுப்பாய்ச்சல் கூற்றை பரீட்சித்த போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு ரூபா 230,828 செயற்பாட்டு வருமானத்திலிருந்து கழித்து கடன்பட்டோர்களிற்கு சீர்செய்யப்பட்டிருந்தது.

(ii) ஆண்டிற்குரிய ரூபா 21,478,709 வட்டி வருமானம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட்டிருக்காததுடன் காசாக பெறப்பட்ட ரூபா 15,688,119 வட்டி வருமானம் நிதி நடவடிக்கைகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iii) புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அமைச்சிலிருந்து பெற வேண்டிய ரூபா 30,000,000 தொகை நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசு உட்பாய்ச்சலாக குறிப்பிடப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்காக 2017 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட வெளிவாரி விரிவுரைக் கட்டணம் ரூபா 80,400 தொகை மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்ட நிலையான சொத்துக்களிற்குரிய கிரயம் மற்றும் பெறுமானத் தேய்வு ஏற்பாடு உரிய கணக்குகளிலிருந்து கழிக்கப்படாமல் அச் சொத்துக்கள் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 153,950 சில்லறைக் கடன்கொடுத்தோராக கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்ட 05 வாகனங்களிற்குரிய ரூபா 3,871,448 விற்பனை இலாபம் சில்லறைக் கடன்கொடுத்தோரிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அவ் இலாபம் கடன்கொடுத்தோர் கணக்கிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில்லுள்ளவாறான காசுப்பாய்ச்சல்களில் காட்டப்பட்ட வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 14,353,062 தொகையில் ரூபா 3,739,162 தொகை அல்லது 26 சதவீதம் 04 வருடங்களிற்கு மேற்பட்ட மீதிகளில் உள்ளடங்கியிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டில் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை பெறவேண்டிய மீதியாக கணக்குகளில் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 290,441 கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரிப் பெறுமதியை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த அதிகாரச்சட்டம் 8 ஆம் உப பிரிவு மற்றும் பெறுகை வழிகாட்டல் பின்னிணைப்பு 13 | ரூபா 8,024,885 உடன்படிக்கைப் பெறுமதியில் சிற்றுண்டிச் சாலையின் உள்ளக வடிவமைப்புக்களை மேற்கொள்ளுதல் மற்றும் ரூபா 17,601,850 இற்கு ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்தல் என்பவற்றிற்காக வழங்குநர்கள் தெரிவுசெய்யப்படும் போது பொது ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் உடன்படிக்கைகள் பதிவுசெய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) | பல்வேறு செயற்பாடுகளிற்காக பெறப்பட்ட முற்பணங்கள் அவற்றிற்குரிய நோக்கம் நிறைவடைந்த உடனேயே தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 22 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட ரூபா 556,720 தொகையான முற்பணங்கள் 11 நாட்கள் தொடக்கம் 34 நாட்கள் வரையான தாமதங்களின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| (இ) | திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2) | பல்வேறு செயற்பாடுகளிற்காக செயல்நிமித்த கட்டுநிதியாக வழங்கக்கூடிய ஆகக் கூடிய பெறுமதி ரூபா 100,000 ஆக காணப்பட்ட போதிலும் அதனை விஞ்சி ரூபா 200,000 மற்றும் ரூபா 283,300 ஆக இரண்டு சந்தர்ப்பங்களின் போது முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

### 2.5 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் ஊழியர்கள் தொடர்பாக செலுத்தப்பட்ட அனைத்து படிகளிற்காக உரிய அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பொதுத் திறைசேரி அல்லது பொது நிர்வாக அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தின் கட்டுப்பாட்டு அதிகாரியினால் பல்வேறு படிகளாக நிறுவகத்தின் நிதியத்திலிருந்து 2016 ஆம் ஆண்டின் போதும் 2017 ஆம் ஆண்டின் போதும் செலுத்தப்பட்ட முறையே ரூபா 1,574,691 மற்றும் ரூபா 1,602,540 தொடர்பாக உரிய அங்கீகாரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 38,418,981 மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 54,535,545 ஆன மிகையொன்றாகக் காணப்பட்டமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 16,116,564 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் செலவினம் ரூபா 13,804,478 ஆல் அதிகரித்திருந்த போதிலும் வட்டி வருமானம் ரூபா 7,666,425 ஆலும் பயிற்சியளித்தல் வருமானம் ரூபா 22,906,953 ஆலும் அதிகரித்தமை இவ் முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளினை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை நிதிசார் மிகையொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது மிகையில் குறைவொன்று காணப்பட்டது. எவ்வாறாயினும் நிதிசார் விளைவுகளிற்கு ஊழியர் ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கம் செய்யும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 115,076,875 ஆகக் காணப்பட்ட நிறுவகத்தின் பங்களிப்பு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 137,931,510 ஆல் முன்னேற்றமடைந்திருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 111,088,905 வரை வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பின்னர் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 142,154,257 ஆகவும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 161,410,561 ஆகவும் அதிகரித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

நடைமுறைச் சொத்து விகிதம் மற்றும் திரவச் சொத்து விகிதம் என்பன முறையே 2:1 மற்றும் 1:1 ஆகக் காணப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தின் நடைமுறைச் சொத்து விகிதம் மற்றும் திரவச் சொத்து விகிதம் என்பன 2015 ஆம் ஆண்டில் 2:1 ஆக காணப்பட்ட போதிலும் 2016 ஆம் ஆண்டில் 19:1 ஆகவும் 2017 ஆம் ஆண்டில் 25:1 ஆகவும் அதிகரித்திருந்தது. முகாமைத்துவத்தால் மிகை நிதியங்கள் நிறுவகத்தின் பிரதான நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 154,169,439 தொகையான குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தமை இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

### 4.1.1 திட்டமிடுதல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பி்ஈடி- 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.3 ஆம் உபபிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் திருத்தம் செய்யப்பட்ட பாதீடு வரிசை அமைச்சு செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தால் இது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திருத்தம் செய்யப்பட்ட பாதீட்டிற்கு இணங்க செயல்நடவடிக்கைத் திட்டத்தை திருத்தம் செய்வதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 215 கற்கைநெறிகளை நடாத்துவதற்காக 3182 மாணவர்கள் பங்குபற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரை 201 கற்கைநெறிகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 3463 ஆகும். எதிர்பார்க்கப்பட்ட கற்கைநெறி எண்ணிக்கைகளை விட உள்ளபடியான கற்கைநெறி எண்ணிக்கைகள் 6.51 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் அதற்காக பங்குபற்றிய மாணவர் எண்ணிக்கையின் 8.83 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் நிறுவனத்தால் நடாத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற கற்கைநெறிகள் தொடர்பாக திட்டமிடும் போதும் பங்குபற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மாணவர்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் போதும் முறையாக திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொறியியல் பிரிவின் 44 கற்கைநெறிகளை நடாத்துவதற்காக 773 மாணவர்கள் பங்குபற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரை 302 மாணவர்கள் பங்குபற்றிய 21 கற்கைநெறிகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(இ) வெளிநபர்களினதும் நிறுவகங்களினதும் வேண்டுகோளின் அடிப்படையில் நடாத்தப்பட்ட கற்கைநெறிகள் தவிர நிறுவகத்தால் மீளாய்வாண்டில் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட 146 கற்கைநெறிகளில் 13 சதவீதம் அதாவது 19 கற்கைநெறிகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(ஈ) 2016 ஆம் ஆண்டின் போது 150 சிறியளவிலான ஆடைத் தொழிற்சாலைகளை உருவாக்குவதற்காக ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் கற்கைநெறிகளை நடாத்தும் நோக்கம் காணப்பட்டதுடன் பயிற்சி கற்கைநெறியை நடாத்துவதற்காக வரிசை அமைச்சால் நிறுவகத்திற்கு ரூபா 06 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,796,346 தொகையும் மீளாய்வாண்டின் போது ரூபா 4,325,138 தொகையும் ஆக ரூபா 6,121,484 கூட்டுமொத்தத் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயிற்சியளிக்கப்பட வேண்டிய 150 பயிலுநர்களில் மன்னாரில் 15 பயிலுநர்களிற்கு பயிற்சியளிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதன் மூலம் தனிநபர்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுதல், பெண்களை வலுவூட்டுதல், சமூக அபிவிருத்தி போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து அமுல்ப்படுத்தப்பட்டிருந்த வீட்டுத்துறை ஆடைத் தொழிற்சாலை செயற்திட்டத்தின் முன்மொழிவொன்றாக பயிலுநர்களின் உற்பத்திகள் சந்தைக்கு உட்பிரவேசிப்பதற்கான வாய்ப்புக்களை பெறுவதற்கான மதியுரை சேவையை வழங்குதல் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந் நடவடிக்கை அமுல்ப்படுத்தப்பட்டமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டத்திற்காக 2040 தையல் இயந்திரங்கள் மற்றும் 41 ‘‘ஓவர் லொக்’’ இயந்திரங்கள் என்பவற்றிற்காக ரூபா 103,598,120 தொகை 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை செலவிடப்பட்டிருந்த போதிலும் இப் பயிலுநர்கள் உரிய கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளமை மற்றும் அங்கே உருவாகியிருந்த சிக்கல்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையால் அமுல்ப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட ‘‘திவியட்ட உதானய’’ தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையால் நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவது தொடர்பான நிகழ்ச்சித்திட்ட விபரம், கால எல்லை, பயிற்சியளிக்க வேண்டிய பயிலுநர்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட சேவைக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் தொடர்பாக இரண்டு தரப்பினர்களாலும் செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(எ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 202,882,320 மொத்த செயற்பாட்டு வருமானத்தில் ‘‘பாலமுனை’’ நூல் நிறந்தீட்டும் நிலையத்தின் விற்பனை வருமானம் ரூபா 978,535 உள்ளடங்கியிருந்த போதிலும் இந் நிலையத்தில் ஆண்டின் ரூபா 2,149,636 மூலப்பொருள் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக ரூபா 2,641,544 தேறிய நட்டம் ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் போது புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தால் கட்டளையிடப்பட்டதன் பிரகாரம் சாயமிடப்பட்ட நூல் தரமானதாக காணப்படாததால் அந் நூல்கள் மீண்டும் நிறந்தீட்டப்பட வேண்டியிருந்தமை இந் நட்டத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் ஆட்சேர்ப்புத் திட்டத்திலுள்ள கனிஷ்ட முகாமையாளர்களின் 4.4.4 ஆம் பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்தது ஒரு ஆண்டிற்கு ஒரு முறை வினைத்திறமை காண் தடைப் பரீட்சை நடாத்தப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தின் முகாமைத்துவம் 2015 மார்ச் 23 இல் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்

திட்டத்தின் திகதியிலிருந்து ஒவ்வொரு பதவி தொடர்பாக வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகளை நடாத்தியிருக்கவில்லை.

(ஆ) இலங்கை தரைப்படையின் தொண்டர் சேவைக்காக சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளர் (தோல் பொருட்கள்) பதவியில் பணியாற்றிய உத்தியோகத்தர் 2018 மார்ச் 05 முதல் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அக் காலப்பகுதியில் ''தொழில்நுட்ப பரிமாற்றமும் தர மேம்படுத்தலும் நிகழ்ச்சித்திட்டம் 2017'' இன் கீழ் ஐந்து நிகழ்ச்சித்திட்டங்கள் செயன்முறையிலிருந்தது. அப் பதவிக்கான வெற்றிடம் காரணமாக இந் நிகழ்ச்சித்திட்டங்களின் செயன்முறைப் பயிற்சி தடைப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2018 ஏப்ரல் 27 இல் அந் நிலையம் மூடப்பட்டிருந்தது. இதன் காரணமாக காலணிகள் மற்றும் தோல் பொருட்களுடன் தொடர்புபட்ட பயிலுநர்களின் பயிற்சி இடைநிறுத்தப்பட்டிருந்தது.

(இ) நிறுவகத்தின் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக 2015 ஆம் ஆண்டில் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ரூபா 822,480 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் சொத்துக்கள் மீதான உண்மையான மீள்மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கும் நியமத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் கணக்குகளிற்கு அவற்றின் நியாயமான பெறுமதிகளை சீராக்கம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காலணி மற்றும் தோல் பொருட்கள் பிரிவிற்காக 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,385,200 கிரயமான 22 பலகையிலான மேசைகள் பௌதீக பரீட்சிப்பின் போது பயன்படுத்தப்படாமல் செய்முறை பயிற்சி பிரிவில் விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிறுவனத்தின் புதிய அலுவலக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக பழைய கட்டிடத்தின் பகுதியொன்று இடித்து அகற்றப்பட வேண்டியிருந்ததால் அவ் அலுவலக உபயோகத்திற்காக ரூபா 80,000 மாதாந்த வாடகைப் பெறுமதியில் கட்டிடமொன்று 2017 யூன் 01 தொடக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2018 ஏப்ரல் 27 வரையிலும் புதிய கட்டிட நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் இதன் காரணமாக வாடகைக்கு பெறப்பட்ட கட்டிடங்கள் பயன்படுத்தப்படாமல் பூட்டப்பட்டிருந்தது. சில நாட்களிற்கு மாத்திரம் பயிற்சிபெறும் மாணவர்கள் சிலரிற்கு அக் கட்டிடத்தில் தங்கியிருப்பதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. அவ் வாடகைக்குப் பெறப்பட்ட கட்டிடத்தின் உடன்படிக்கை காலம் 2018 ஏப்ரல் 16 ஆம் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் 10 மாதங்களிற்கான வாடகைப் பெறுமதியாக ரூபா 800,000 செலுத்தப்பட்டிருந்தது.

வெளித்தரப்பினர்களிற்கிடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் 3(எவ்) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உடன்படிக்கை இரத்துச் செய்யப்படுமானால் 03 மாதங்களிற்கு முன்னரே ஏனைய தரப்பினர்களிற்கு தெரியப்படுத்தப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தால் உடன்படிக்கை இரத்துச் செய்யப்படுவதாக தெரியப்படுத்திய போது அது 2018 மார்ச் 09 இல் அதாவது 38 நாட்களிற்கு முன்னரேயாகும். இதன் காரணமாக நிறுவனத்தால் செலுத்தப்பட்ட ரூபா 240,000 முற்பணத் தொகையில் மீண்டும் 2018 ஆகஸ்ட் 06 இல் நிறுவனத்திற்கு ரூபா 80,000 மாத்திரம் பெறப்பட்டிருந்ததுடன் நிறுவகத்திற்கு ரூபா 160,000 நட்டம் ஏற்பட்டிருந்தது.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியிணியினர் 140 ஆகக் காணப்பட்டதுடன உள்ளபடியான பதவியணியினர் 98 ஆகக் காணப்பட்டமையால் 42 வெற்றிடங்கள் காணப்பட்டன. இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட இப் பதவிகளை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தின் பதவியணியினரில் சிரேஷ்ட, இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்டத்தில் 82 உத்தியோகத்தர்கள் சேவையிலீடுபட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட வேலை உதவியாளர்களின் எண்ணிக்கை 13 ஆக காணப்பட்ட போதிலும் ஒரு வேலை உதவியாளரே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

(இ) ஆட்சேர்ப்புத் திட்டத்தின் 5.3 ஆம் பிரிவின் பிரகாரம் பொது அறிவித்தலூடாக விண்ணப்பம் கோரப்படாமல் உதவிப் பொறியியலாளர் (தகவல் தொழில்நுட்பம்) பதவிக்காக உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தார்.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

**5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சிநிரல்’’ இன் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவகமும் முறையாக செயற்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டு தொடர்பாக நிறுவகத்தால் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருந்த போதிலும் 2030 ஆண்டு நிகழ்ச்சிநிரல் தொடர்பாக அறிந்திருந்ததன் அடிப்படையில் அதன் நோக்கெல்லையின் பிரகாரம் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டிருக்கவில்லை.

**5.2 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

2016 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பின்வரும் விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) 2009 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் ஸ்தாபிப்பிலிருந்து 08 வருடங்கள் கடந்திருந்த போதிலும், 2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவக அதகாரச்சட்டத்தின் பகுதி 01 இன் 04(அ) பந்தியின் பிரகாரம் புடைவை மற்றும் ஆடை தொழிற்துறைகளுக்கான பட்டப்பின்படிப்பு மற்றும் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 2017 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சர்வதேச மற்றும் தேசிய நியமங்கள் மற்றும் கம்பனிகளின் நியம முறைமைகளிற்கு இணங்க புடைவை மற்றும் ஆடை தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு தராதரப்பத்திரங்களினை வழங்குவது நிறுவகத்தின் நோக்கமொன்றாகக் காணப்படுகின்ற போதிலும், நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட ‘‘வேலை கல்வி’’ கற்கைநெறி தவிர ஏனைய கற்கைநெறிகளிற்காக தேசிய தொழில்சார் தகைமை மட்ட (NVQ) அங்கீகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) ஓட்டத்திற்கு உகந்ததல்லாத நிலையிலுள்ள ஜீப் வண்டியொன்று கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சிடமிருந்து 2014 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் தற்காலிக அடிப்படையில் பெறப்பட்டிருந்ததுடன், அதன் மீதான திருத்தச் செலவினமாக ரூபா 362,175 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவ் வாகனம் ஓட்டத்திற்கு உகந்த நிலைக்கு மாற்றப்பட்டிருக்காததனால் மீண்டும் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் திருத்தங்களிற்காக செலவிடப்பட்ட பணத்தினை கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரியினால் நிறுவகத்திற்கு வழங்கப்பட்ட கெப் வண்டி வரிசை அமைச்சின் பாவனைக்காக 2013 செப்தெம்பர் 04 இல் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அவ் வாகனத்தின் திருத்த செலவினங்களாக ரூபா 910,472 கூட்டுத்தொகை நிறுவனத்தினால் செலவிடப்பட்டிருந்த போதிலும் அப் பணத்தை அமைச்சிடமிருந்து மீள்நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாதிருந்தது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறை

### 6.1.1 பெறுகைகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்பக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (அ), (ஆ), (இ) மற்றும் (உ) வழிகாட்டல்களின் பிரகாரம் பெறுகை நிறுவகத்தால் ஆகக் குறைந்தது மூன்று வருட காலப்பகுதியொன்றிற்காக எதிர்பார்க்கப்படுகின்ற பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கி பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு தொடர்ந்துவருகின்ற ஆண்டிற்கான பெறுகைச் செயற்பாடுகள் விபரமாக தயாரிக்கப்பட வேண்டும். அத்துடன் பிரதான பெறுகை திட்டம் 06 மாதங்களிற்கு மேற்படாத காலப்பகுதியினுள் நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டம் அத் தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஆ) பாதுகாப்பு சேவை, துப்பரவாக்கல் சேவை மற்றும் நிறுவக பதவியணியினர் மற்றும் மாணவர்களிற்கான போக்குவரத்து வசதிகளை வழங்கும் சேவை என்பவற்றிற்காக கேள்வி கோரும் செயற்பாட்டில் பங்குபற்றியிருந்த அனைத்து கேள்வியாளர்களினாலும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.11 ஆம் ஏற்பாடுகளிற்கிணங்க வேண்டப்பட்ட படிவத்தின் பிரகாரம் கேள்வி பிணைமுறி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அது தொடர்பாக பெறுகை பெறுகை நிறுவகத்தால் எவ் வகையிலும் கேள்வியாளர்களிற்கு தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.10 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 10 சதவீதத்திற்கு மேற்படாமல் உரிய நிதிசார் பாதுகாப்பு மூலம் பொறுப்பு தொடர்பான கடப்பாடு மேவுகை செய்யப்பட வேண்டிய போதிலும் 2017/2018 பாதுகாப்பு சேவை செலவினம் ரூபா 2,142,000 மற்றும் துப்பரவாக்கல் சேவை செலவினம் ரூபா 3,360,000 தொடர்பாக செயலாற்றல் பிணைமுறி பெறப்பட்டிருக்கவில்லை.

### 6.1.2 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் சிற்றுண்டிச்சாலையின் முன்மொழியப்பட்ட உள்ளக வடிவமைப்புக்களிற்காக 2017 ஒக்தோபர் 14 இல் தேசிய போட்டிக் கேள்வி நடைமுறையின் கீழ் கேள்விகள் கோரப்பட்டிருந்தன. மூன்று கேள்வியாளர்களால் விலைமனுக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றிலிருந்து ஒப்பந்ததாரரொருவரை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய போட்டிக் கேள்விகள் கோருவதற்கான ஆகக் குறைந்த காலப்பகுதி 21 நாட்களாக காணப்பட்ட போதிலும் இப் பெறுகையின் கேள்விகளை கோருவதற்காக 12 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

(ii) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.3.1(ஆ) பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவர்கள் மதியுரையாளர்களாக இருக்கக்கூடாத போதிலும் இப் பெறுகைக்காக நியமனம் செய்யப்பட்ட மதியுரையாளரொருவர் தொழில்சுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவரொருவராகவும் காணப்படுகின்றார்.

(iii) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பின்னிணைப்பு 18 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒப்பந்த வேலையை முடிவுறுத்துவதற்காக நிர்ணயிக்கப்பட்ட கால எல்லையை நீடிக்கும் போது கேள்விப் பிணை உறுதிப்படுத்தப்பட்டுள்ள செல்லுபடியாகும் திகதி முடிவடைவதற்கு முன்னர் கேள்வி பிணை நீடிக்கப்பட வேண்டிய போதிலும் மேற்படி ஒப்பந்தம் தொடர்பாக 2018 மார்ச் 06 இல் உள்ளவாறு ரூபா 1,882,638 முற்பண கேள்விப் பிணை மற்றும் 2018 மார்ச் 07 இல் உள்ளவாறு ரூபா 802,488 செயலாற்றல் பிணைமுறி என்பவற்றின் செல்லுபடியாகும் காலப்பகுதி முடிவடைந்திருந்தது. கேள்வி பிணை அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு ரூபா 1,882,638 வேலை ஆரம்பிப்பு முற்பணம் 2018 சனவரி 03 இல் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 யூன் 30 வரையிலும் நிறுவனத்தால் சிற்றுண்டிச்சாலையின் முன்மொழியப்பட்ட உள்ளக வடிவமைப்பு நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புடைவை மற்றும் ஆடைத் துறை தொடர்பான கற்கைநெறிகள் மற்றும் பட்டப்பின்படிப்பு மற்றும் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்கும் நோக்கத்திற்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக திறைசேரியால் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2017 திசெம்பர் வரை ரூபா 23 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. அந் நிதியேற்பாடுகளில் 2018 மே 31 வரை பிரதான திட்டம் மற்றும் மண் மாதிரிப் பரிசோதனைக்காக மாத்திரம் ரூபா 1,586,831 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 2018 யூலை 31 வரையிலும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 21,413,619 ஆன மிகுதி தொகை குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்கள் மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே 10 சதவீதம் தொடக்கம் 310 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 7. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | கடன்பட்டோர் | கடன்பட்டோர் மீதிகளை முறையாக அறவீடு செய்யும் நடைமுறையொன்று நிறுவகத்தால் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கற்கைநெறிகளை நடாத்துதல் | பரீட்சை நடவடிக்கைகளை நடுநிலையாகவும் ஒழுங்காகவும் நடாத்துவதற்காக பரீட்சைப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பெறுகை நடவடிக்கை | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |